Chapter XX*III Code of Criminal Procedure)*

| | | | |
|---|---|---|---|
| *IN THE COURT OF`* | I ADDITIONAL DISTRICT COURT TIRUNELVELI | | |
| Calendar | | SC.No.376/2025 | |
| Miscellaneous | | | |
| Preliminary Register | | | |
| Sessions | | | |
| Deposition of Witness for | | Prosecution | P.W.1 |
| | | Defence | |
| Name | | திரு.முத்துகுமார் | |
| Father's Name | : | திரு.பரமசிவன் | |
| Village | : | மானூர் | |
| Taluk | : | திருநெல்வேலி | |
| Calling | : | அரசு தரப்பு சாட்சி | |
| Age | : | 43 | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 28th day of April 2026.

(எதிரி ஆஜர்படுத்தப்பட்டார்.)

<u>முதல் விசாரணை</u> :–

நான் தற்போது மானூரில் குடியிருந்து வருகிறேன். சாட்சி வேல்முருகன், வசந்தகோகிலன் ஆகியோரை எனக்கு தெரியாது. ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. இவ்வழக்கு சம்மந்தமாக எனக்குத் எதுவும் தெரியாது. என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையது அல்ல. இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

(அரசு வழக்கறிஞர் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரினார். ஆவணங்களை பரிசீலனை செய்த பிறகு அனுமதி வழங்கப்பட்டது)

<u>குறுக்கு விசாரணை (அரசு தரப்பில்)</u>

கடந்த 04.12.2024 ம் தேதி காலை 10.00 மணியளவில் நானும், வேல்முருகன், வசந்தகோகிலன் ஆகிய மூன்று பேரும் ரஸ்தா, மதவக்குறிச்சி ரோடு சுடலைகோவில் அருகே நடந்து சென்றுகொண்டிருந்தபோது ஆஜர் எதிரி நடந்து வந்து என் மீது மோதிவிட்டு என்னை முறைத்தார் என்றும், நான் எதிரியை பார்த்து எதற்கு முறைத்து பார்க்கிறீர்கள் என்று கேட்டதற்கு எதிரி என்னை பார்த்து ஏலே தேவடியா மவனே நான் யார் என்று தெரியுமா என்று சொல்லிவிட்டு அவரது சட்டைக்கு பின்னால் மறைத்து வைத்திருந்த அரிவாளை எடுத்து இத்தோடு செத்துதொல என்று எனது தலையை பார்த்து ஓங்கிவெட்டினார் என்றும் நான் சற்று கூனியவே அந்த வெட்டு என் மீது படவில்லை என்றும், நான் கூனியாவிட்டால் என் தலை துண்டாகி அந்த இடத்திலே இறந்திருப்பேன் என்றும் அப்போது அந்த சம்பவத்தை பார்த்த வேல்முருகன், வசந்தகோகிலன் ஆகியோர்கள் சத்தம்போடவே எதிரி என்னை பார்த்து இன்று நீ தப்பித்துவிட்டாய், என்றிருந்தாலும் உன் சாவு என் கையில் தான் என்று எதிரி அரிவாளை காட்டி மிரட்டிவிட்டு சென்றார் என்றும், பின்னர் நடந்த சம்பவத்திற்கு நடவடிக்கை எடுக்க மானூர் காவல்நிலையம் சென்று எதிரி மீது புகார் கொடுத்துவிட்டு தற்போது எதிரிக்கு பயந்து உண்மையை மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை**

**மறுவிசாரணை இல்லை.**